# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# அரையாண்டுப் பரீட்சை 2023

ஆண்டு: 4 திகதி: 17.06.2023

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி சாந்தினி விஜயநாதன்

மாணவர் பெயர்: ______________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 20 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 2 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் பந்தியை வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.**

அது ஒரு சிறிய ஆறு. ஆற்றின் நீரோட்டத்தை எதிர்த்து மீன்கள் நீந்திக்கொண்டிருந்தன. எல்லாம் குஞ்சு மீன்கள். மீன்வேட்டைக்கு வந்திருந்த கொக்குகளும் நாரைகளும் ஆற்றின் கரையில் நின்று, அவற்றை பிடித்து விழுங்கிக்கொண்டிருந்தன.

ஒரு வெள்ளைக்கொக்கு மட்டும் ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தது. நெடுநேரமாக நின்றது. அதனுடைய கால்களுக்கு இடையே மீன்குஞ்சுகள் நீந்திச் சென்று கொண்டிருந்தன. அவற்றைக் கடைக்கண்ணால் பார்த்த கொக்கு, "சீ, சீ! இவை சின்னக் குஞ்சுகள். இவை எனக்கு வேண்டாம். மற்றவர்களைப் போல் இவற்றைப் பிடித்து உண்ணமாட்டேன். பெரிய மீன் வரட்டும் லபக்கென்று பிடிப்பேன். பிடித்துக் கொண்டு என் மரத்திற்குப் போய், கொத்திக் கொத்தி உண்ணுவேன்" எனத் தன்னுள் எண்ணிக் கொண்டு நின்றது.

நேரம் செல்லச் செல்ல கொக்கிற்குப் பசிக்கத் தொடங்கியது. பசித்தால் பசிக்கட்டும், பெரிய மீன் வரட்டும் என்று ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தது. மற்றக் கொக்குகள் வேட்டையை முடித்துக் கொண்டு தங்கள் இருப்பிடத்திற்கு திரும்பிவிட்டன, மாலையும் வந்து சேர்ந்தது. "பெரிய மீன் வரவில்லை. இருண்டுவிட்டது. பசியோ வயிற்றைக் கிள்ளியது. மடத்தனம் பண்ணிவிட்டேனே! பெரிய மீனுக்கு ஆசைப்பட்டு குஞ்சு மீனையும் விட்டு விட்டு பட்டினியாய்ப் போகிறேனே!" என்று வருந்தியபடி பறந்து சென்றது.

1 மீன் வேட்டைக்கு வந்த பறவைகள் எவை?

____________________________________________

2 வெள்ளைக் கொக்கு என்ன செய்துகொண்டு இருந்தது?

____________________________________________

3 வெள்ளைக் கொக்கு எதற்காக குஞ்சு மீன்களைப் பிடிக்கவில்லை?

____________________________________________

4 மாலை வந்ததும் கொக்கு என்ன செய்தது?

____________________________________________

5 கொக்கின் பசி தீர்ந்ததா? ஏன்?

____________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 3 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுங்கள்.

1 உப்பாக, நீர், இருக்கும், கடல்

______________________________________________________________________________

2 மாணவர்களை, அழைத்துச், காட்சிச்சாலைக்கு, சென்றார், மிருக, ஆசிரியர்

______________________________________________________________________________

3 ஓடும், முயல், வேகமாக, மிக

______________________________________________________________________________

4 அழகானவை, உள்ள, மாலாவின், பூக்கள், பூந்தோட்டத்தில்

______________________________________________________________________________

5 பாடல்களை, விரும்பி, பெரியவர்களும், படிப்பார்கள், பாரதியாரின், சிறியவர்களும்

______________________________________________________________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

கீழே தரப்பட்ட சொற்களை வைத்துக் கீறிட்ட இடங்களை நிரப்புக.

**கவர்ந்தது, நீர், கீச்சிடுவதே, பறவையானால், அழகிய**

நான் பூந்தோட்டத்தில் ______________ ஊற்றிக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு

____________ குருவி எங்கள் முற்றத்து மாமரத்தில் வந்திருந்தது. அதன் அழகு

என்னைப் பெரிதும்__________________. அது கீ... கீ என்று __________________

தனி ஆனந்தம். இதைப் போன்று நானும் ஒரு _______________ எவ்வளவு ஆனந்தமாய் இருக்கும் என்று எண்ணினேன்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | 4 | 20 |

பிரித்து எழுதுக = ____________________ +_________________

தமிழ்ப்பாடம் = ____________________ +_________________

கையெழுத்து = ____________________ +_________________

முகிற்கூட்டம் = ____________________ +_________________

மனக்கவலை = ____________________ +_________________

ஆற்றங்கரை = ____________________ +_________________

**சேர்த்து எழுதுக.**

முகில் + கூட்டம் =_________________________

பகல் + பொழுது =_________________________

மரம் + அரிந்தான் =_________________________

உணவை + எடுத்தான் =_________________________

பாட்டு + பாடினாள் =_________________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 5 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |

**உமது நண்பனின் அல்லது நண்பியின் பிறந்த நாள் விழாவிற்கு செல்லமுடியாதுள்ளது என்பதைத் தெரிவித்து அவருக்கு 40 சொற்களுக்கு குறையாமல் கடிதம் ஒன்று எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 6 | புள்ளிகள் | | பக்கம் | 20 |

**பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி 50 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக.**

1 எனது பொழுது போக்கு
2 நீர் வாசித்து ரசித்த கதை
3 பத்திரிகைகளும் அவற்றின் பயன்களும்
4 எனது செல்லப் பிராணி